National Heritage Board

61 Stamford Road
#03-08 Stamford Court
Singapore 178892

www.nhb.gov.sg

**பின்னிணைப்பு A**

**விவரக்குறிப்பு மற்றும் சமர்ப்பிப்பு வழிகாட்டிகள்**

1. **சிங்கப்பூர் மரபுடைமைத் தொழில் திட்டம் என்பது என்ன?**

தேசிய மரபுடைமை வாரியம், தலைசிறந்த உள்ளூர் மரபுடைமைத் தொழில்களைக் கொண்டாடி ஆதரவளிப்பதற்காக மரபுடைமைத் தொழில் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது. இந்தத் தொழில்கள்:

- நமது செறிவுமிக்க மரபுடைமையைக் கட்டிக்காத்து வளர்ப்பவையாக இருக்கும்;
- சமூகத்துடன் வலுவான தொடர்புள்ளவையாக இருக்கும்;
- தங்கள் தொழிலை நீடித்து நிலைக்கச்செய்வதில் கடப்பாடு கொண்டவையாக இருக்கும்.

உங்கள் தொழில் 30 ஆண்டுகளுக்கு மேல் சிங்கப்பூரின் வரலாற்றில் ஓர் அங்கமாக நீடித்து வந்திருந்தால், இத்திட்டம் உங்களுக்கானது.

2. **மரபுடைமைத் தொழில் என்பது என்ன?**

மரபுடைமைத் தொழில்கள்தான் **சிங்கப்பூர்க் கலாசார சூழலின்** முதுகெலும்பு. இவை காலங்காலமாகப் போற்றிக் காக்கப்படும் வணிகங்கள், பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குகின்றன. தனது அக்கம்பக்கத்தின் பண்பையும் அடையாளத்தையும் நிர்ணயிக்கும் சமூக நங்கூரங்களாகவும் இவை திகழ்கின்றன.

இந்தத் தொழில்கள் பல்லாண்டுகளாக மாற்றங்களைத் தாக்குபிடித்து, சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றமடைந்தாலும், தங்கள் அடிப்படைகளில் மாறாமல் நம்பகத்தன்மையுடன் இருக்கின்றன.
இவை வெறும் கடைகள் மட்டுமல்ல; **இவை நமது தனித்துவமான அடையாளங்களையும் கலாசாரங்களையும் வெளிப்படுத்தும் நிகழ்கால வரலாறாகும் .**

3. **எதற்காக விண்ணப்பம் செய்யவேண்டும்?**

ஒரு தொழில், சிங்கப்பூர் மரபுடைமைத் தொழிலாக அங்கீகரிக்கப்படும்போது, அதற்குப் பல்வேறு அனுகூலங்கள் கிடைக்கும்:

a. **கடையை பற்றி விழிப்புணர்வு: பல்வேறு விளம்பரங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் வாயிலாக அரசாங்க அமைப்புகளும் பங்காளிகளும் கடையை பற்றி தகவல் பரப்புவர்**

b. **மரபுடைமை நிலையைத் தெரியப்படுத்தும் அடையாளக்குறிகள்:** கடையின் முன்புறத்தில் அடையாளக்குறி, சமூக வலைத்தளங்களிலும் இணையத்தளத்திலும் பயன்படுத்துவதற்கான மின்னிலக்கச் சின்னங்கள் உள்ளிட்ட துணைப் பொருட்கள்.

c. **தொழில் ஆதரவு:** கடையின் அளவுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப, தொழிலை மேம்படுத்தவும் உருமாற்றவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதவளிக்கப்படும்.

**4. இத்திட்டம் யாருக்கானது?**

திட்டத்திற்குத் தகுதிபெறக்கூடிய தொழில்:

a. சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்டு, சிங்கப்பூரில் இயங்கி வரவேண்டும்;
b. 1 ஜனவரி 2025 நிலவரப்படி குறைந்தது 30 ஆண்டுகள் இயங்கியிருக்க வேண்டும். இடையில் 2 ஆண்டுகளுக்கு மேலான தொடர்ந்த இடைவெளி இருக்கக்கூடாது;
c. குறைந்தது 30% பங்குமுதல் சிங்கப்பூரர்களுக்கு மற்றும்/அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசிகளுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகச் சொந்தமாக இருக்கவேண்டும். இது தனிப்பட்டவரின் இறுதி உரிமையின்படி நிர்ணயிக்கப்படும்;
d. மத்திய வட்டாரத்தில் அமைந்திருக்க வேண்டும், குறிப்பாக சைனாடவுன் (கிரேத்தா ஆயர், புக்கிட் பாசோ, நீல் சாலை), கம்போங் கெலாம், லிட்டில் இந்தியா, டௌன்டவுன், ஆர்ச்சர்ட் வட்டாரங்கள்[1]

நாங்கள் தேடும் தொழில்கள்:

a. அதே சமூகத்தில் அல்லது அக்கம்பக்கத்தில் கடந்த 30 ஆண்டுகளாக நிலைத்திருக்கவேண்டும்;

b. பாரம்பரிய வணிகங்கள், பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகள் வழங்கவேண்டும் (எடுத்துக்காட்டுகளின் பட்டியலைப் பின்னிணைப்பு B-ல் பார்க்கவும்);

c. வலுவான சமூகத் தொடர்பை அல்லது விளைவுகளை வெளிக்காட்டவேண்டும், உதாரணமாக:
   - ஒரு சமூகத்திற்குப் பயன்படும் பொருளை அல்லது சேவையை வழங்குதல்; அல்லது
   - சமூக நிகழ்ச்சிகளை நடத்துதல் அல்லது பங்கெடுத்தல்; அல்லது
   - சமூகத்தினருக்கு அல்லது சமூகத்திலுள்ள அமைப்புகளுக்கு ஆதரவளித்தல்.

d. தனது மரபுடைமையைக் கட்டிக்காப்பதில் கடப்பாடு கொண்டிருக்கவேண்டும்.

தகுதி நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் விண்ணப்பம் வெற்றிபெறும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். மேலும், கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளில் அனைத்தும் உள்ளடங்கிவிடவில்லை. மேற்காணும் நிபந்தனைகளைத் தாங்கள் நிறைவேற்றும் விதத்திற்குச் சொந்தமாக விளக்கம் வழங்குமாறு வர்த்தகங்களை ஊக்குவிக்கிறோம். தகுதிபெறும் விண்ணப்பங்களை தேசிய மரபுடைமைக் வாரியம் நியமிக்கும் பிரதிநிதித்துவக் குழுவினர் மதிப்பிடுவார்கள்.

5. **எப்படி விண்ணப்பம் செய்வது**

உங்கள் தொழிலை அல்லது உங்கள் மனங்கவர்ந்த மரபுடைமைத் தொழிலை முன்மொழியுங்கள். **ஒரு தொழிலை முன்மொழியும் பொதுமக்கள், விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமுன் அந்தத் தொழிலிடம் அனுமதி பெறவேண்டும்.**

விண்ணப்பம் செய்ய:

- தயவுசெய்து இணையம்வழி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்;
- படிவத்தைத் தாக்கல் செய்வதற்குத் தேவையான ஆதாரப் பத்திரங்களைத் தயார்ப்படுத்துங்கள். ஆதாரப் பத்திரங்கள், ஏற்கப்படும் வடிவங்கள் பற்றிய மேல்விவரங்களை அடுத்த பகுதியில் காணலாம்.

விண்ணப்பப் படிவம் பின்வரும் மொழிகளை ஏற்கும்: ஆங்கிலம், மலாய், மெண்டரின், தமிழ். திட்டத்தைப் பற்றிய மேல்விவரங்களுக்கும் இணையம்வழி விண்ணப்பப் படிவத்திற்கும் தயவுசெய்து பின்வரும் விரைவுத் தகவல் (QR) குறியீடுகளையும் இணைப்புகளையும் பயன்படுத்துங்கள். மேற்கொண்டு விவரம் கேட்டறிய, சிங்கப்பூர் மரபுடைமைத் தொழில் திட்டச் செயலகத்தின் sg_heritage_business@nhb.gov.sg முகவரிக்கு மின்னஞ்சல் எழுதி அனுப்புங்கள்.

**இணையம்வழி விண்ணப்பப் படிவம்**

https://go.gov.sg/sghbs25

https://go.gov.sg/sghbs25

## 6. விண்ணப்பிக்கும் காலமும் முடிவுகளின் அறிவிப்பும்

விண்ணப்பிக்கும் காலம் மார்ச் 20-ஆம் தேதி தொடங்கி 18 மே 2025 வரை நீடிக்கும். முடிவுகள் 2025 ஜூலை மாதத்திற்குள் அறிவிக்கப்படும். காலக்கெடுவான 18 மே 2025, இரவு 2359 மணிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது

விண்ணப்பத்தின் முடிவுகள் 2025 ஜூலை மாதம் மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். திட்டத்தின் முடிவுகள் அனைத்தும் இறுதியானவை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

## 7. விண்ணப்பத்திற்கான சரிபார்ப்புப் பட்டியலும் சமர்ப்பிப்பு வழிகாட்டிகளும்

ஆதாரப் பத்திரங்கள் அனைத்தும் எங்களது இணையம்வழி விண்ணப்பப் படிவத்தின் வாயிலாகப் பதிவேற்றம் செய்யப்படவேண்டும். படிவத்தைப் பூர்த்தி செய்த பிறகு சமர்ப்பிக்கப்படும் ஆதாரப் பத்திரங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

தயவுசெய்து கீழே உள்ள சரிபார்ப்புப் பட்டியலைப் பயன்படுத்தி, பின்வரும் பத்திரங்கள் தயாராக இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

| **பத்திரங்கள்** | | **சமர்ப்பிப்பு வழிகாட்டிகள்** |
|---|---|---|
| ☐ | விண்ணப்பப் படிவம் | தயவுசெய்து கட்டாயமான பகுதிகள் அனைத்தும் நிரப்பப்பட்டிருப்பதை உறுதி செய்யுங்கள் |
| ☐ | தொழிலின் வயதுக்கான ஆதாரம் | தொழிலின் வயதை நிரூபிப்பதற்குப் பயன்படுத்தக்கூடியவை:<br>• “ACRA Bizfile” அல்லது வாடகை ஒப்பந்தங்கள், நிலச்சொத்து கொள்முதல் பத்திரங்கள், ஆகியவற்றில் எது முன்னதாக உள்ளதோ;<br>• வேறு ஆதாரப் பத்திரங்கள், ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் தனிப்பட்ட முறையில் பரிசீலிக்கப்படும். |

National Heritage Board

61 Stamford Road
#03-08 Stamford Court
Singapore 178892

www.nhb.gov.sg

<table>
<tr><td></td><td></td><td>வேறு ஆதாரப் பத்திரங்களைத் தரும் விண்ணப்பதாரர்கள், அந்தப் பத்திரங்களில் இருக்கும் தகவல்கள் <u>சரிபார்க்கக்கூடியவையாக</u> இருப்பதை உறுதி செய்யவேண்டும். சரிபார்க்கப்படாத பத்திரங்கள் பரிசீலிக்கப்படாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.</td></tr>
<tr><td>☐</td><td>தொழிலின் பாரம்பரியத் தன்மையை நிரூபிக்கும் ஆவணங்கள்</td><td rowspan="3">சமர்ப்பிப்பின் வடிவம்<br><br>பற்பல பத்திரங்களைச் சமர்ப்பிப்பதாக இருந்தால், ஒவ்வொரு பகுதியின் ஆதாரப் பொருட்கள் அனைத்தையும் ஒரே “compressed zip” கோப்பாக, அல்லது ஒரே “PDF” பத்திரமாகத் தொகுத்திடுங்கள். பகிரப்படும் பத்திரங்கள் அனைத்தும் திறந்து பார்க்கக்கூடியவையாக இருப்பதை உறுதி செய்வது விண்ணப்பதாரர்களின் பொறுப்பு என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள். கோப்பின் அளவுக்கு வரம்புகள் இருப்பதால், பதிவேற்றப்படும் ஒவ்வொரு பத்திரமும் “3MB” அளவுக்குமேல் இருக்கக்கூடாது.<br><br>ஏற்கப்படும் ஆதாரப் பத்திர வடிவங்களின் எடுத்துக்காட்டுகளில் பின்வருபவை உள்ளடங்கும், இவையல்லாத மற்ற வடிவங்களும் உண்டு:<br><br>• படங்கள்<br><br>a. பொருத்தமின்மை பிரச்சனைகளைத் தவிர்க்க, தயவுசெய்து பின்வரும் வடிவங்களில் படங்களைச் சமர்ப்பித்திடுங்கள்: .jpeg, .jpg அல்லது .png<br><br>• காணொளிகள்<br><br>a. கோப்பின் அளவுக்கு வரம்புகள் இருப்பதால், தயவுசெய்து தேவையான பகுதிகளை மட்டும் சமர்ப்பித்திடுங்கள் அல்லது கோப்புகளைச் சுருக்குங்கள்.<br><br>b. இணையம்வழி பார்வையிடக் கிடைக்கும் காணொளி கோப்புகளுக்கு (எ.கா. சமூக</td></tr>
<tr><td>☐</td><td>தொழிலின் சமூகத் தொடர்புகளின் ஆதாரம்</td></tr>
<tr><td>☐</td><td>தொழிலின் நீடித்த நிலைத்தன்மையில் புத்தாக்கத்தைப் புகுத்தி மேம்படுத்தியதை, அல்லது மேம்படுத்த நினைத்திருப்பதை வெளிப்படுத்தும் ஆவணங்கள்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | வலைத்தளத்தில்), உங்களது ஆதாரப் பத்திரத்தில் “URL” முகவரியைக் குறிப்பிடுங்கள்.<br><br>c. உங்களது காணொளி கோப்புகளைச் சமர்ப்பிக்க உதவி தேவைப்பட்டால், sg _heritage_business@nhb.gov.sg மின்னஞ்சல் முகவரியில் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்<br><br>• **சமூகக் குறிப்பீடுகள்,** பின்வருபவை உள்ளடங்கலாம்:<br><br>a. சரிபார்க்கக்கூடிய வாடிக்கையாளரின் நற்சான்றுகள் (கடிதங்கள் / காணொளி அறிக்கைகள்)<br><br>b. செய்தி அறிக்கைகள், ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் (எ.கா. வர்த்தகத்தின் சமூக ஈடுபாட்டை வெளிப்படுத்தும் கட்டுரைகள் அல்லது சமூக வலைத்தளப் பதிவுகள்)<br><br>c. சமூகத் தலைவர்கள் அல்லது அமைப்புகள் அளித்த ஆதரவுக் கடிதங்கள் (எ.கா. வர்த்தகச் சங்கங்களின் தலைவர்கள், அரசாங்கச் சார்பற்ற அமைப்புகள்)<br><br>d. சொந்த உபரிப் பொருட்கள் (எ.கா. வாடிக்கையாளர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள்)<br><br>• **ஊடக வெளியீடுகள்,** எடுத்துக்காட்டாக:<br><br>a. செய்தி மற்றும்/அல்லது சஞ்சிகை கட்டுரைகள்<br><br>b. பேட்டிகள் |

| | | |
|---|---|---|
| | | c. சமூக வலைத்தள வெளியீடுகள், போன்றவை. |
| ☐ | (பொருந்துமாயின்) தேசிய மரபுடைமைக் வாரியத்திடமிருந்து அல்லது வேறு பொது அமைப்புகளிடமிருந்து மானியங்கள் அல்லது நிதி பெற்றதற்கான ஆதாரம் | ஏற்கப்படும் வடிவங்களில் இவை உள்ளடங்கலாம்:<br><br>• கையொப்பமிட்ட அளிப்புக் கடிதங்கள்;<br>• கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்;<br>• சரிபார்க்கக்கூடிய படங்கள்/காணொளிப் பொருட்கள்;<br>• சரிபார்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய வேறு வகையான ஆவணங்கள். |
| ☐ | (பொருந்துமாயின்) தேசிய மரபுடைமைக் வாரியம் நடத்திய அல்லது வாரியம்சார்ந்த திட்டங்களில் பங்கெடுத்ததற்கான ஆதாரம் | |

**பின்னிணைப்பு** B

**தகுதிபெறும் வட்டாரங்களின் வரைபடம்**

1. மத்திய வட்டாரத்தில், குறிப்பாக சைனாடவுன் (கிரேத்தா ஆயர், புக்கிட் பாசோ, நீல் சாலை), கம்போங் கெலாம், லிட்டில் இந்தியா, குடிமை வட்டாரம், பிராஸ் பாசா, பூகிஸ் வட்டாரம், டௌன்டவுன், ஆர்ச்சர்ட்[2] ஆகியவற்றில் அமைந்துள்ள கடைகள் மட்டுமே 2025-ல் சிங்கப்பூர் மரபுடைமைத் தொழில் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யத் தகுதி பெறும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் கடை தகுதி பெறுகிறதா என்பதை நிர்ணயிக்க, பின்வரும் வழிகளில் ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம்:

a. கீழே உள்ள வரைபடப் படங்களையும் மத்திய வட்டாரத்தின் எல்லையை வரையறுக்கும் சாலைகளின் பட்டியலையும் பாருங்கள்;

b. கூகல் வரைபடத்தில் எல்லைகளைக் காண “Central Area” என உள்ளிடுங்கள். கீழே படம் 1-ல் உள்ள எல்லைகளை இணையத்தளம் காட்டும்;

2. உங்களுக்கு ஏதாவது ஐயம் இருந்தால், சிங்கப்பூர் மரபுடைமைத் தொழில் திட்டச் செயலகத்தின் sg_heritage_business@nhb.gov.sg மின்னஞ்சல் முகவரிக்குப் பின்வரும் விவரங்களுடன் எழுதிக் கேளுங்கள்:

a. கடை பெயர் மற்றும் முகவரி;
b. தொழில் வகை (விற்கும் பொருட்கள்/வழங்கும் சேவைகள்)

<u>படம் 1: மத்திய வட்டார எல்லைகள்</u>




<u>பட விளக்கம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | கெப்பல் மேம்பாலச்சாலை | 10 | பெல்மோரல் சாலை |
| 2 | கென்டான்மன்ட் சாலை | 11 | புக்கிட் தீமா சாலை |
| 3 | ஊட்ரம் சாலை | 12 | தேக்கா லேன் |
| 4 | கிம் செங் சாலை | 13 | ரங்கூன் சாலை |
| 5 | சாயன் சாலை | 14 | சிராங்கூன் சாலை |
| 6 | கிரேஞ்ச் சாலை | 15 | சையத் அல்வி சாலை |
| 7 | தங்ளின் சாலை | 16 | ஜாலான் சுல்தான் |
| 8 | ஆரஞ்சு குரோவ் சாலை | 17 | பீச் சாலை |
| 9 | ஆண்டர்சன் சாலை | 18 | ஓஃபிர் சாலை |

National Heritage Board

61 Stamford Road
#03-08 Stamford Court
Singapore 178892

www.nhb.gov.sg

படம் 2: மத்திய வட்டார எல்லைகளின் அருகாமைப் படம் 1



<u>படம் 3: மத்திய வட்டார எல்லைகளின் அருகாமைப் படம் 2</u>



National Heritage Board

61 Stamford Road
#03-08 Stamford Court
Singapore 178892

www.nhb.gov.sg

<u>படம் 4: மத்திய வட்டார எல்லைகளின் அருகாமைப் படம் 3</u>



<u>படம் 5: மத்திய வட்டார எல்லைகளின் அருகாமைப் படம் 4</u>



**பின்னிணைப்பு C**

**பாரம்பரிய வணிகங்கள், பொருட்கள் மற்றும் சேவைகளின் எடுத்துக்காட்டுகள்**

1. பாரம்பரிய வணிகங்கள், பொருட்கள், சேவைகள் என்பது சிங்கப்பூரின் கலாசார மரபுடைமையும் அடையாளத்தையும் உள்ளடக்கிய, **உள்ளூரில் வேரூன்றிய** பலதரப்பட்ட நடைமுறைகள், பொருட்கள் அல்லது அறிவாற்றலைக் குறிக்கலாம். பின்வரும் எடுத்துக்காட்டுகளும், இவை அல்லாத மற்றவையும், இதில் உள்ளடங்கலாம்:

| S/N | பிரிவு | விரிவான எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | **கைவினை, கலைத்திறன் பாரம்பரியங்கள்** | • தலைமுறைத் தலைமுறையாக வழிவந்த கைத்திறனையும் கலைத்திறனையும் வெளிப்படுத்தும், உள்ளூர் மரபுடைமையில் ஆழமாக வேரூன்றிய கலைத்திறன் மற்றும் கைவினைத்திறன் பாரம்பரியங்கள்.<br><br>• பாரம்பரிய உத்திகள், பொருட்கள், வடிவமைப்புகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் கையால் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் கலைப்பொருட்கள். எடுத்துக்காட்டாக, நெசவுத்துணி, மர வேலைப்பாடு, உலோக வேலைப்பாடு. |
| 2 | **சமையல்கலை மற்றும் உணவுப் பாரம்பரியங்கள்** | • பாரம்பரிய சமையல்குறிப்புகள், சமையல் முறைகள், உள்ளூர் விளைபொருட்கள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்று, சமையல்கலை பாரம்பரியத்தை பாதுகாக்கும் சமையல் மற்றும் உணவு சார்ந்த கடைகள்.<br><br>• சிங்கப்பூரின் பன்மயக் கலாசாரத் தாக்கங்கள், சமையல்கலை பாரம்பரியங்கள் ஆகியவற்றின் அடையாளச் சின்னமாகத் திகழும் உணவு மற்றும் பானங்களை வழங்கும் கடைகள். |
| 3 | **கலாசார சேவைகள் மற்றும் செய்முறைகள்** | • கலாசார அறிவாற்றல், நிபுணத்துவம் அல்லது உள்ளூர் பாரம்பரிய அனுபவங்களை வழங்கும் சேவைகள். குணப்படுத்தும் பழக்கவழக்கங்கள், கலாசாரப் படைப்புகள், திருமணச் சேவைகள் போன்றவை இதில் உள்ளடங்கும்.<br><br>• கலாசார செய்முறைகளின் காப்பாளர்களாக, நமது கலாசார மரபுடைமையைப் பாதுகாக்கவும், பரப்பவும், |

| | | |
|---|---|---|
| | | போற்றிக் கொண்டாடவும் பங்களிக்கும் சேவைகளை வழங்கும் தொழில்கள் (எ.கா. சடங்குகள், சமூக நிகழ்ச்சிகள்). |
| 4 | **பாரம்பரிய வணிகங்கள்** | • உள்ளூர் சூழலில் உருவாகி, பரம்பரை பரம்பரையாகச் செயல்பட்டு, நீண்டகாலமாக நீடித்து நிலைத்துவரும் தொழில்கள் (எ.கா. செருப்பு தைக்கும் தொழில்; புத்தகக் கடைகள்) |

2. பலதரப்பட்ட சேவைகளை வழங்கும் தொழில்கள், அவை வழங்கும் பாரம்பரிய வணிகங்கள், பொருட்கள் அல்லது சேவைகள் நிரந்தரமானவை (அதாவது, குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வழங்கப்படுபவை அல்ல) என்பதையும், தங்களது தொழிலில் பெரும்பங்கு வகிக்கும் குறிப்பிடத்தக்க அம்சம் என்பதையும் நிரூபிக்கவேண்டும்.

3. பாரம்பரிய வணிகங்கள், பொருட்கள், சேவைகள் ஆகியவற்றைப் பரப்புவதில் அல்லது பாதுகாப்பதில் பிரதானமாக ஈடுபாடு கொண்டிராத, அல்லது கலாசார சார்பற்ற சிறப்புச் சேவைகளை வழங்கும் தொழில்கள், இந்தத் திட்டத்திற்குத் தகுதி பெறாமல் போகலாம். <u>பின்வரும் எடுத்துக்காட்டுகளும், இவை அல்லாத மற்றவையும், இதில் உள்ளடங்கலாம்:</u>

a. **உள்ளூர் அல்லாத கிளை உணவகங்கள்:** பாரம்பரிய அல்லது உள்ளூர் சமையல்கலை பாரம்பரியங்களில் நிபுணத்துவம் பெற்றிதார, சிங்கப்பூரின் மரபுடைமைக்கு நேரடியாகப் பங்களிக்காத அனைத்துலக உணவகக் கிளைகள்;

b. **பொதுவான பொருட்களை விற்கும் சில்லறைக் கடைகள்:** வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட பொதுவான பொருட்களையும் தயாரிப்புகளையும் பிரதானமாக விற்பனை செய்யும் பெரிய சில்லறைக் கடைகள் மற்றும் பல்பொருள் கடைகள்;

c. **தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள்:** மின் விளம்பர முகவைகள், மென்பொருள் உருவாக்கும் நிறுவனங்கள், இணைய வர்த்தகத் தளங்கள் போன்ற தொழில்நுட்பம் சார்ந்த பொதுவான சேவைகளில் கவனம் செலுத்தும் தொழில்கள்;

d. **பன்னாட்டு நிறுவனங்கள்:** கலாசார இயல்பில்லாத அல்லது தாங்கள் வழங்கும் நிபுணத்துவச் சேவைகளின் ஒரு பகுதியாகக் கலாசார செய்முறைகளை வழங்குவதில் அதிக ஈடுபாடு கொண்டிராத நிபுணத்துவச் சேவைகள். அனைத்துலகச் சட்ட நிறுவனங்கள், நிதி ஆலோசனை நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள் போன்றவை இதில் உள்ளடங்கும்.

National Heritage Board
61 Stamford Road
#03-08 Stamford Court
Singapore 178892
www.nhb.gov.sg

4. உங்களுக்கு ஏதாவது ஐயம் இருந்தால், சிங்கப்பூர் மரபுடைமைத் தொழில் திட்டச் செயலகத்தின் sg_heritage_business@nhb.gov.sg மின்னஞ்சல் முகவரிக்குப் பின்வரும் விவரங்களுடன் எழுதிக் கேளுங்கள்:

a. கடை பெயர் மற்றும் முகவரி
b. தொழில் வகை (விற்கும் பொருட்கள்/ வழங்கும் சேவைகள்)

5. மேற்காணும் முகவரிக்கு மின்னஞ்சல் எழுதி அனுப்புவதற்குமுன், திட்டத்திற்குத் தகுதி பெறுவதற்கான மற்ற நிபந்தனைகளை உங்கள் தொழில் நிறைவேற்றுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தகுதி நிபந்தனைகளை இந்த இணையப்பக்கத்தில் காணலாம்: **https://go.gov.sg/sgheritagebusiness.**